சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

<u>Case No. MCOP. 143/2017</u>

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்துல் அஜிஸ் | தொழில் | பிசினஸ் |
| தந்தை பெயர் | அப்துல் மஜித் | ஜாதி | |
| கிராமம் | ரஹிமான்பேட்டை கண்ணமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 41 |

**<u>11.11.2025 முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரின் பதிவு சான்று உண்மை நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரின் பாலிசி உண்மை நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து பதிவேடு உண்மை நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவ செலவிற்கான ரசீது **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவ செலவிற்கான மற்றொரு ரசீது **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் வழங்கிய காயச்சான்று **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)